**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:- திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2024 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**I.A.No.06/2023 In O.S.No.23/2020**

1) பத்மாவதி

2) பாபு .... மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1) அமுதா

2) வேல்முருகன் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 04.06.2024 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

வாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்ய அனுமதி கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**

(1) மனுதாரர் வழக்கின் 2 ம் வாதி. மற்ற வாதிக்காகவும் இவ்வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கின் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்படி எதிர்வழக்குரைக்கு ஆட்சேபனை செய்து தன் தரப்பில் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு கூடுதல் வழக்குரையை உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எனவே தனது கூடுதல் வழக்குரையை அனுமதிக்க கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>**

(2) எதிர்மனுதார் தனது பதிலுரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டுமென்றும், மனுதாரர்கள் தங்களது கூடுதல் வழக்குரையை எவ்வித காரணமும் இன்றி தற்போது காலதாமதமாக இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளனர் என்றும், இம்மனுவில் அனுமதிக்கத்தக்க காரணம் எதுவும் இல்லை என்றும், தங்கள் கூடுதல் வழக்குரையில் மனுதாரர்கள் புதிய சங்கதிகளை கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே காலதாமதமாக எவ்வித காரணமும் இன்றி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளனர்.

(3) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் பிரதிவாதிகளின் பதிலுரைக்கு தங்கள் தரப்பு ஆட்சேபனைக்காக கூடுதல் வழக்குரை தாக்கல் செய்ய வேண்டுமென அனுமதி கோரியுள்ளனர். எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் விசாரணையானது தற்போது வரை தொடங்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் தரப்பினர்கள் தங்கள் தரப்பு சங்கதிகளை முழுமையாக எடுத்துரைக்க மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்காவிடில் இவ்வழக்கில் முழுமையான தீர்வை எட்ட இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரரின் கூடுதல் வழக்குரையை அனுமதிக்கலாம் என்றும், இதனால் பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இவ்வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில் பிரதிவாதிகள் தங்கள் பதிலுரையை 2021ம் வருடமே தாக்கல் செய்துள்ள நிலையில் 2 வருடம் காலதாமதமாக மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்பது அறியமுடிகிறது. எனவே, இம்மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதித்து மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு இவ்வழக்கின் செலவுத்தொகையாக ரூ.1000/-ஐ 18.06.2024ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி ஆகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 19.06.2024.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து

சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 11 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI Date: 2024.06.11 16:37:58 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும்சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

R TAMILARASI Digitally signed by R TAMILARASI Date: 2024.06.11 16:38:04 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**